GODependence
True freedom is being dependent on God

# செய்தி மடல்

பிப்ரவரி 2025



## வாசிப்போம் சிந்திப்போம் – 4




பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தையின் இனிமையானது தேனின் சுவையுடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வேதம் “தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது” என்று சங்கீதக்காரன் கூறுகிறார் (சங்.19:10, 119:103). நாம் அனைவரும் அறிந்திருக்கிறபடி, தேன் இனிமையானதாகவும் அதிக ஊட்டச்சத்துகளைக் கொண்டதாகவும் இருக்கிறது. உலகமெங்கிலும் பல நூற்றாண்டுகளாக தேன் ஒரு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. தேனின் இனிப்புச் சுவையை நாம் நினைக்கையில், நம் நாவில் அதை சுவைத்துப்பார்க்கவேண்டும் என்ற உணர்வு நமக்கு ஏற்படலாம். எனினும், நீங்கள் என்றைக்காவது தேனீக்களைப் பற்றி யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா?

ஒரு தேனீயானது தன் வாழ்நாளில் ஒரு தேக்கரண்டி தேனில் பனிரெண்டில் ஒரு பகுதி தேனையே சேகரிக்கிறது. இதன் பொருள் என்னவெனில், ஒரு தேக்கரண்டி தேன் (5 மில்லி) 12 தேனீக்களின் ஆயுட்கால உழைப்பால் உருவாக்கப்பட்டது ஆகும். தேனீயானது ஒரு தடவை தன் கூட்டை விட்டு வெளியே தேன் சேகரிக்கச் செல்லும்போது, 50 முதல் 100 பூக்களிடம் செல்கிறது. தேனீக்கள் ஒருபோதும் உறங்குவதில்லை. மனிதர்கள் சாப்பிடுவதற்கான உணவை உற்பத்தி செய்யும் ஒரே பூச்சி தேனீ மட்டுமே. தேன் மற்றும் தேனீ குறித்து இதுபோன்ற பல சுவையான தகவல்களை நீங்கள் வாசித்தறியமுடியும். நான் முன்பு குறிப்பிட்டதுபோல, நம் கைகளில் இருக்கும் வேதாகமானது அவ்வளவு எளிதாக நம் கரங்களுக்கு வந்துசேரவில்லை. 1500 வருட கால அளவில் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பெரும்பாலும் ஒருவரையொருவர் சந்தித்திராத ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கிறது. இதில் தேவனுடைய இரட்சிப்பின் கதையைப் பற்றியதொரு மாபெரும் வரலாறு இருக்கிறது. தேவன் மனிதனுக்கு அருளின காலத்தால் அழியாத செய்தியானது பரிசுத்த வேதாகமத்தில் இருக்கிறது.

ஆனால், நம்மில் எத்தனைபேர் எவ்வித சாக்குப்போக்கும் சொல்லாமல் பரிசுத்த வேதாகமத்தை முறையாக அனுதினமும் வாசிப்பதற்கு நேரத்தை திட்டமிட்டு செல்விடுகிறோம்?

தேவனுடைய வார்த்தையுடனான நெருக்கம் குறைவாக இருப்பதற்கு சொல்லும் பொதுவான காரணங்கள் அல்லது சாக்குப்போக்குகளில் ஒன்று என்னவெனில், ஏறக்குறைய எல்லா நாட்களுமே தங்களுக்கு மிகவும் அலுவல் நிறைந்த நாட்களாக இருக்கிறபடியால் வேதாகமத்தை வாசிக்க நேரமே இல்லை என்பதாகும். உங்களுக்கு ஒரு ஐந்து நிமிடம் கிடைத்தால், அந்த நேரத்திற்குள் நீங்கள் வேதாகமத்தின் ஒரு புத்தகத்தை வாசித்து முடித்துவிட முடியும். 10 நிமிடங்கள் உங்களுக்கு இருக்குமெனில், அப். பேதுருவின் இரண்டாம் நிருபத்தை நீங்கள் வாசித்து முடிக்கலாம். இது போல, உங்களுக்குக் கிடைக்கும் நேரம் மற்றும் உங்கள் வசதிக்கேற்ப, கீழே பக்கம் 9 ல் கொடுக்கப்பட்டிருக்கும் தரவுகளின் அடிப்படையில் நீங்கள் வேதாகமத்தின் புத்தகங்களை வாசிக்க முடியும்.

முழு வேதாகமத்தையும் நீங்கள் விரும்பும் கால அளவில் வாசித்து முடிக்க ஒவ்வொருநாளும் எவ்வளவு நேரம் செலவழிக்க வேண்டியதிருக்கும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள விரும்பினால், பக்கம் 10 ஐ பார்க்கவும்....


**இதன் தொடர்ச்சி... பக்கம் 9 ல்...**


### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ **GODependence** நாடுகிறது.

**வளமான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமத்தைக் குறித்த அறிவு அவசியம்.**
**- பில்லி கிரஹாம்**

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் GODependence குழுவின் சார்பில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்கள் அனைவருடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த தருணத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

நம்மில் பலரும் இந்த ஆண்டை உற்சாகம் மற்றும் நம்பிக்கையுடன் கூடிய சிறப்பான தீர்மாங்களுடன் தொடங்கினோம். ஆனால் நாள்கள் கடந்து செல்லச் செல்ல, அதில் நிலைத்திருப்பதை கடினமாக்கும் பல்வேறு சவால்கள் எழும்; இந்த நேரத்தில் தான் தேவகிருபையுடன் கூடிய விடாமுயற்சி மிகவும் அவசியமானதாகிறது. "'நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்." என பரிசுத்த வேதாகமம் நம்மை கலாத்தியர் 6:9 ல் உற்சாகப்படுத்துகிறது. நாம் எடுக்கும் முயற்சிகள் தேவ பலத்தில் வேரூன்றினால், அது சரியான நேரத்தில் கனி தரும்.

சில நேரங்களில் நாம் நமது முயற்சியை விட்டுவிடலாம் போலத் தோன்றும். ஆனால் தேவனுடைய வார்த்தை நமக்கு உறுதியாக சொல்லுகிறது: “என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.” (2 கொரிந்தியர் 12:9). எனவே, நம்முடைய சொந்த திறமைகளில் மட்டும் நம்பிக்கை வைக்காமல், தேவனுடைய பலத்தின் மேல் தினமும் சார்ந்திருப்போம். இயேசு தாமே லூக்கா 9:62ல் கூறினார்: “கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல.” நாம் பின்னடைவுகளால் சோர்ந்து போகாமல், நம்பிக்கை மற்றும் பொறுமையுடன் முன்னேறிச் செல்வோம்.


இந்த ஆண்டை நாம் கடந்து செல்லும் போது, தேவனுடன் நமது அர்ப்பணிப்பை புதுப்பித்து, தினமும் அவர் தரும் பலத்தினை நாடி, அவர் நமக்கு முன்பாக வைத்திருக்கும் பாதையில் பொறுமையுடன் செல்வோம். அவரது கிருபையால் விசுவாசத்தைக் காத்துக் கொண்டோம் என ஆண்டு முடிவில் நாம் மகிழ்ச்சியுடன் திரும்பிப் பார்க்கும் வண்ணம் நமது தீர்மானங்களில் உறுதியாக நிலைத்திருக்க தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக.

ஜனவரி 12, 2025, அன்று GODependence குழுவாக 2025 ஆண்டுக்கான நமது திட்டமிடுதல் கூடுகையை நடத்தினோம். தேவனுடைய கிருபையால், நமது கடந்த ஆண்டின் நடவடிக்கைகளை மீள்பார்வை செய்து, வரும் ஆண்டிற்கான செயல்திட்டங்களை வகுக்க முடிந்தது. 2025ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள ஊழிய நடவடிக்கைகள் அனைத்தும் கிரமமாகவும் எவ்வித தடையில்லாமலும் நடைபெற வேண்டு மென உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள்.

வழக்கம் போல், இந்த ஆண்டும் ”ரமலான் வேத வாசிப்பு சவாலை” (பிப்ரவரி 28 - மார்ச் 30) நடத்துகிறோம். இந்த வருடத்தில் முதன்முறையாக ”லெந்துகால வேத வாசிப்பு சவாலையும்” (மார்ச் 5 - ஏப்ரல் 17) அறிமுகப்படுத்துகிறோம். இவ்விரண்டு தேதிகளும் ஒரே நேரத்தை ஒட்டியிருப்பதால், நமது வேதவாசிப்பு சவால்களில் கலந்து கொள்பவர்கள் தங்களுடைய வழக்கமான வேத வாசிப்பு சவால்களுடன் கூடுதலாக ஒரே நேரத்தில் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றில் மட்டும் சேரமுடியும்.

‘’வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்’ மற்றும் ’விளையாடுவோம் வேதாகம விளையாட்டு’ போன்றவைகளில் உற்சாகமாக கலந்து கொள்கிற ஒவ்வொருவரையும் மனமார வாழ்த்துகிறோம். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள்

**துதிப்போம்:**

1. 2025 ம் ஆண்டுக்கான ஊழிய காரியங்களை திட்டமிட GODependence Team க்கு தேவன் உதவியதற்காக.
2. 2024-25 கல்வியாண்டின் சிறுவர் வேத வாசிப்பு (CBRC) குழுக்களுக்காக.
3. 2025 ரம்ஜான் மற்றும் லெந்து காலங்களில் திட்டமிடப்பட்டுள்ள வேத வாசிப்பு சவால்களுக்காக.
4. 2025 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாத வேத வாசிப்பு குழுக்களில் இணைந்திருக்கின்ற ஒவ்வொருவருக்காக.
5. நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இம்மட்டும் கொடுத்திருக்கிற ஜீவன் சுகம் பெலனுக்காக.

**ஜெபிப்போம்:**

1. 2025 ஆண்டுக்காக திட்டமிடப்பட்டிருக்கும் ஊழிய காரியங்கள் அனைத்தும் தொய்வில்லாமல் ஒழுங்கும் கிராமமுமாக செயல்படுத்தப்பட.
2. சிறுவர் வேத வாசிப்பு குழுக்களில் (CBRC) இணைந்து இருக்கும் சிறுவர்கள் இந்த மூன்றாம் பருவத்தில் துவங்கி இருக்கும் வேத வாசிப்பை வெற்றிகரமாக முடிக்க மற்றும் கொடுக்கப்பட்ட வேத வசனங்களை மனனம் செய்ய.
3. 2025 ரம்ஜான் மற்றும் லெந்து கால வேத வாசிப்பு சவால் குழுக்களில் அநேகர் இணைந்து வேதம் வாசிக்க / ஜெபிக்க முன்வர.
4. 2025 ம் வருடத்தில் வேத வாசிப்பு குழுக்களில் இணைகின்றவர்கள் இந்த வருடத்தில் ஒருமுறையாவது வேதாகமத்தை வாசித்து முடிக்க. அதற்கு வருகின்ற தடைகளை எல்லாம் தகர்த்தெறிய.
5. நமது வேதவாசிப்பு குழுக்களில் இணைந்துள்ளவர்களில் பெலவீனத்தோடும் சுகவீனத்தோடும் இருக்கிற ஒவ்வொருவரும் ஆண்டவரால் பெலப்படுத்தப்பட; சுகப்படுத்தப்பட. தங்களுக்கு அன்பானவர்களை இழந்து தவிக்கின்ற குடும்பத்தின் மக்களுக்கு ஆண்டவர் ஆறுதலை தர.

**தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் தேவனுடைய வார்த்தையை படிப்பதுதான் மிகச் சிறந்த குணநலன்களை உருவாக்கி இருக்கிற இரகசிய ஒழுங்கு ஆகும். - ஜேம்ஸ் W. அலெக்சாண்டர்**

# எக்காலத்திற்கும் ஏற்ற ஒரு ஜெபம்

**நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். - சங்கீதம் 90:12**

சகோ. அற்புதராஜ் சாமுவேல்



## எக்காலத்திற்கும் ஏற்ற ஒரு ஜெபம்

நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். (சங்கீதம் 90:12)

“*எனக்கு தலைக்கு மேல வேலை இருக்கு*, ”*நான் ரொம்ப பிஸி*” என்று பலர் அடிக்கடி சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஜனங்கள் பல்வேறு காரியங்களுக்குப் பின்னே பரபரப்பாக வேகமாக ஒவ்வொரு நாளும் ஓடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் ”*நான் ரொம்ப பிஸி*” என்று சொல்லும்போது, “*என்னைத் தொந்தரவு செய்யாதே*”, *உன்னுடன் பேசிக்கொண்டிருக்க எனக்கு இப்போது நேரம் இல்லை*”, “*நான் செய்வதற்கு பல வேலைகள் இருக்கின்றது*”, மற்றும் “*மூச்சுவிடக்கூட நேரம் இல்லாதபடிக்கு நான் பல வேலைகளை செய்ய வேண்டியதாக இருக்கிறது*” என்று அவர்கள் சொல்வதாக பொருள் கொள்ளலாம். அவர்கள் எல்லோரும் தேவையற்ற காரியங்களில் ஒரு நொடிகூட செலவழிக்காமல் தங்கள் நேரத்தை மிகச் சிறப்பாக பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவார்கள் என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால், புள்ளிவிவரங்கள் இதற்கு எதிரான ஒரு காட்சியை முன்வைக்கின்றது.

சராசரியாக, மக்கள் தினமும் சுமார் 2 மணி நேரம் 30 நிமிடங்கள் முதல் 3 மணி நேரம் வரை சமூக ஊடகங்களில் தங்கள் நேரத்தை செலவழிப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. முகநூல், யூடியூப், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதில் மக்கள் அடிமையாகி, ஒருவரின் வாழ்க்கையில் அவை செலுத்தக்கூடிய கட்டுப்பாடு மற்றும் தாக்கத்தை உணராமல் இருக்கிறார்கள். சமூக ஊடகங்களை எல்லா வயதினரும் பயன்படுத்தி, தங்கள் விரல் நுனியில் பல விஷயங்களை அவைகள் மூலமாக அணுக முடியும். சில நேரங்களில், சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அனைவருக்கும் கிடைப்பது நல்லதா கெட்டதா என்று நம்மை யோசிக்க வைக்கிறது.

மறுபுறம், நம் நேரத்தை மதிப்பதற்கும், நம் நேரத்தின் அருமையை உணர்ந்து அதை முறையாக பயன்படுத்துவதற்கும் பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறது. நாம் யாராக இருந்தாலும்—பணக்காரர், ஏழை, வாலிபர், முதியவர், படித்தவர், மற்றும் படிப்பறிவில்லாதவர் என் யாராக இருந்தாலும்— நம் அனைவருக்கும் ஒரு நாளில் கிடைக்கும் நேரம் ஒரே அளவு தான் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். சிலர் இந்த பூமியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்வார்கள் என்று நினைத்து செயல்படுகிறார்கள். அவர்கள் தங்கள் முடிவு என்ன என்பதைப் பற்றி யோசிக்காமல் அல்லது அதைப் பற்றிக் கவலைப்படாமல் செல்வத்தையும் உடைமைகளையும் பெறுவதில் தங்கள் சக்தியையும் நேரத்தையும் செலவிடுகிறார்கள். அத்தகைய ஒருவரைப் பற்றி இயேசு ஒரு உவமையில் கூறினார். இங்கு நாம் காணும் அந்த ஐசுவரியவான் தனது மீதமுள்ள வாழ்க்கையை செல்வம் மற்றும் உலக இன்பங்களில் வாழ முடியும் என்று நினைத்தார்.

> **“ஒருவர் தன் வாழ்க்கையில் இனி தனக்கு அதிக நாட்கள் இல்லை என்பதை உணரும்போது, அவர்/அவள் தனது நேரத்தை கவனமாகச் செலவிடுவார்.”**

”*தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்*” (லூக்கா 12:20). ஒருவர் தன் வாழ்க்கையில் இனி தனக்கு அதிக நாட்கள் இல்லை என்பதை உணரும்போது, அவர்/அவள் தனது நேரத்தை கவனமாகச் செலவிடுவார்.

“*கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்*” என்று தாவீது ஜெபிக்கிறார். நம் ஆயுட்காலத்தின் அளவு “*நாலு விரற்கடையளவு*” மட்டுமே. நம் நாட்கள், மாதங்கள், மற்றும் வருடங்கள் ஆகியவை நாம் நினைப்பதைவிட மிகவேகமாக முடிந்துவிடுகின்றன. நம் நேரத்தை நாம் முறையாக பயனுள்ள விதத்தில் செலவழிக்கிறோமா என்று நா ஒரு சுயபரிசோதனை செய்து பார்ப்போமாகில், நம்மில் அனேகர் நம் நேரத்தில் பெரும்பகுதியை தேவையற்ற காரியங்களில் செலவிடுவதை அறிந்து வருந்துவோம். இந்த உலகில் நாம் வாழப்போகும் நாட்கள் மிகக் கொஞ்சமே என்பதை நாம் புரிந்துகொள்ளும்போது, நான் குறுகிற மற்றும் நீண்டகால இலக்குடன் ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்துவைப்போம்.

ஞானமுள்ள இருதயமுடையவராக இருக்க வேண்டும் என்கிற விருப்பம் உள்ளவராக மோசே இருந்தார் என்பதை அவருடைய ஜெபம் பிரதிபலிக்கிறது. எனவே, அவர் “*எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்*” என்று தேவ ஜனங்களுக்காக அவர் தேவனிடம் வேண்டிக்கொள்கிறார். நம் வாழ்க்கை மிகவும் குறுகிய காலமே என்பதை நாம் உணர்ந்துகொள்ளும்போது, நம் வாழ்க்கை மூலமாக நீண்டநாள் தாக்கத்தை ஏற்படுத்த நாம் திட்டமிடுவோம். நேரத்தை எவ்வாறு நாம் செலவழிக்கவேண்டும் என்பதை வேதாகம அடிப்படையில் நாம் திட்டமிடுகிறோமா? “*நீங்கள் எதில்/எதற்கு அதிக நேரம் செலவழிக்கிறீர்கள் என்பதை வைத்து நீங்கள் எதை மிகவும் முக்கியமானதாக கருதுகிறீர்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும்*” என ஒரு பிரபல ஆசிரியர் கூறுகிறார். நாம் வாழ்கிற வாழ்க்கை முறையானது நாம் எதை அவசியமானது என கருதுகிறோம் என்பதை நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு வெளிப்படுத்தும்.

நாம் நம் நேரத்தை வீணாக்காமல், ஒவ்வொருநாளும் என்ன செய்யவேண்டும் என தேவன் விரும்புகிறாரோ அதைச் செய்து, அவருடைய மகிமைக்காக நம் நேரத்தைப் பயன்படுத்தவேண்டும் என தேவனிடம் கேட்போமாக. இப்பொழுது நாம் மாம்சத்தில் பிழைத்திருக்கிறது, நம்மில் அன்புகூர்ந்து நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலேயே நாம் உயிர்வாழ்கிறோம் என்பதை நினைவில் கொள்வோமாக. ”*ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.* ( எபேசியர் 5:15-16).

**தேவனுடைய வார்த்தைகளில் தேவனுடைய இருதயத்தில் இருப்பது என்ன என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். – பிஷப் கிரகோரி**

## 📕வேதவாசிப்புச் சவால்கள் - 2025 மார்ச் 01 முதல்📕

"தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து கொள்வதற்காக தேவனுடைய வார்த்தையை வாசிப்பதுதான் மிகச் சிறந்த குணநலன்களை உருவாக்குகிற இரகசிய ஒழுங்கு ஆகும்." - ஜேம்ஸ் W. அலெக்ஸ்டாண்டர்




புத்தாண்டு தீர்மானங்களின் ஒரு பகுதியாக ஜனவரி 2025 முதல் நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கியிருப்பீர்கள். இன்றைய நிலவரப்படி உங்களால் அதனைத் தொடர்ந்து வாசித்து வர முடிந்ததா?

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 பிப்ரவரி 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**பின்வருவன நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

- "2024ம் ஆண்டில் 12 முறை பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக வாசிக்க எனக்கு தேவன் கிருபை செய்தார். GODependence வேதவாசிப்புச் சவால்கள் ஒரு ஆசீர்வாதமான திட்டம் ஆகும். GODependence வேதவாசிப்புச் சவாலில் இணையும் அனைவரும் எளிமையாக முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க முடியும்." - - T. Helen Jiji
- "கர்த்தருடைய பெரிதான கிருபையால் *2024* ம்ஆண்டில் *4* முறை முழுவேதாகமத்தையும் வாசித்து முடிக்க முடிந்தது. *GODependence* வேதவாசிப்புச் சவாலில் இணையும்படி நான் அநேகரை உற்சாகப்படுத்தி சேர வைத்தது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்." - A R Elizabeth
- "நான் எனது தாயாரை இழந்திருந்த நேரத்தில் *GODependece*ன் ஆறுமாத வேத வாசிப்புச் சவாலில் சேர்ந்தேன். நான் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்த போது, கொஞ்சம் கொஞ்சமாக நான் என் துக்கத்தில் இருந்து வெளிவர ஆரம்பித்தேன். இதற்கிடையே *1* மாத வேதவாசிப்புச் சவாலிலும் என்னை இணைத்துகொண்டு, கடந்த ஆறுமாதங்களில் மொத்தம் மூன்று முறை நான் பரிசுத்த வேதாகமத்தை வெற்றிகரமாக வாசித்து முடித்திருக்கிறேன். வேதாகமத்தை நான் வாசிக்கும் ஒவ்வொரு தடவையும், தேவன் புதிய வசனங்கள் மூலமாக என்னுடன் பேசுகிறார். அவருடைய வசனங்கள் எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கின்றது என்பதை நான் வார்த்தைகளால் விவரிக்க இயலாது." - Anitha Pauline

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 மார்ச் 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✷ வேதவாசிப்புச் சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✷ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✷ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு **கால அளவுத் திட்டம்** மற்றும் **மொழி**_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _**பெயர்** (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் **வயதை** இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

CLICK HERE **https://wa.me/96565962559**

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.🙏

- **GODependence குழு**



தேவனுடைய வார்த்தையின் நியமங்களின்படி கட்டப்பட்ட வேதாகமரீதியிலான நட்பை நாம் கட்டி எழுப்ப வேண்டும். - கேரி இன்ரிக்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 4

**வேதப்பகுதி: யோவான்**

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

## I. என்ன சம்பவம் கண்டுபிடி



1



2




3

## II. அற்புதங்களை கண்டுபிடி



1



2



3



4



5



6



7

https://forms.gle/RWrPKwLrb2iPgS3P8

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/02/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.


## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேத வாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R



JOIN NOW!

### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1K சந்தாதாரர்களையும் 250 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil






### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)


நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். - ஏசாயா 30:21



உங்களுக்குத் தெரியுமா?

## எசேக்கியாவின் சுரங்கப்பாதை பரிசுத்த வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது

இது ஜெருசலேமில் உள்ள எசேக்கியாவின் சுரங்கப்பாதையின் சமீபத்திய புகைப்படமாகும். இது தோராயமாக 533 மீட்டர் நீளம் கொண்டது மற்றும் கிமு 701 இல் கட்டப்பட்டது.

ஆக்கிரமிப்பு அசீரியப் படைகளால் ஜெருசலேமின் நீர் விநியோகம் துண்டிக்கப்படாமல் பாதுகாக்க, கீகோன் ஊற்று என்னும் ஜெருசலேமின் முதன்மை நீர் ஆதாரத்திலிருந்து தண்ணீரைத் திருப்பி, நகரச் சுவர்களுக்குள், சீலோவாம் குளம் என்ற பாதுகாப்பான இடத்துக்குத் திருப்பி விடுவதற்காக, எசேக்கியா ராஜா இந்த சுரங்கப்பாதையைக் கட்டினார்.

இந்த சுரங்கப்பாதை பற்றிய துல்லியமான பதிவை பரிசுத்த வேதாகமம் வழங்குகிறது:

"எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய எல்லா வல்லமையும், அவன் ஒரு குளத்தையும் சாலகத்தையும் உண்டாக்கினதினாலே தண்ணீரை நகரத்திற்குள்ளே வரப்பண்ணினதும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது." (2 இராஜாக்கள் 20:20).

மீண்டும் மீண்டும், இதுபோன்ற தொல்பொருள் கண்டுபிடிப்புகள் பரிசுத்த வேதாகமத்தின் வரலாற்று துல்லியத்தை உறுதிப்படுத்துகின்றன.
நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை மேலும் ஆராய்ந்து அதன் மறைந்துள்ள பொக்கிஷங்களை கண்டுபிடிக்க விரும்புகிறீர்களா?

இன்றே பரிசுத்த வேதாகமத்தின் முதல் பக்கம் தொடங்கி கடைசிப் பக்கம் வரை உங்கள் பயணத்தை துவங்குங்கள்!

உங்களுக்குத் தெரியுமா?




அரசர்கள், மீனவர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் அறிஞர்கள் உட்பட பல்வேறு பின்னணியில் இருந்து 40க்கும் மேற்பட்ட வெவ்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்ட புத்தகங்களின் தொகுப்பே வேதாகமம் என்பது உங்களுக்குத் தெரியுமா? இது சுமார் 1,500 ஆண்டுகளுக்கும் மேலாக மூன்று மொழிகளில் (எபிரேயம், அரமேயம் மற்றும் கிரேக்கு) எழுதப்பட்டது.



பைபிளில் உள்ள மிகக் குறுகிய வசனம் இரண்டு வார்த்தைகள் மட்டுமே என்பது உங்களுக்குத் தெரியுமா?

**"இயேசு கண்ணீர்விட்டார்"**

- யோவான் 11:35

---

## கடந்த மாதம் இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு -3 பங்கு பெற்று சரியான பதில் அனுப்பிய நபர்கள் மற்றும் சரியான பதில்கள்

விளையாடுவோம் வேதாகம விளையாட்டு -3

**வேதப்பகுதி: லூக்கா**

### I. என்ன சம்பவம் கூறு?

1) சகரியா மற்றும் எலிசபெத்துக்கு யோவான் பிறந்தது-லூக்கா 1:57
2) இயேசு கிறிஸ்து 40 நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டது-லூக்கா 4:2
3) சுத்தமான 10 குஷ்டரோகிகள்; ஒருவன் மட்டும் தேவனை மகிமைப்படுத்துதல்.-லூக்கா 17:17
4) பெரும் பாடுள்ள ஸ்திரி லூக்கா8.43,44
5) சகரியா ஊமையானது லூக்கா 1:20
6) நல்ல சமாரியன் - லூக்கா 10:33-35

### II. என்ன வசனம் கூறு

1) இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்.லூக்கா 10:19
2) கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது.லூக்கா 11:34
3) அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்.லூக்கா 10 :27
4) கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான். லூக்கா 12 :25

### III. இயேசு கூறியது/கேட்டது

1) சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.லூக்கா 10:18
2) உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?லூக்கா 11:11
3) ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.லூக்கா 18:25
4) இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா?லூக்கா 12:6
5) பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன்.லூக்கா 12:49

### சரியான பதில்களை அனுப்பிய நபர்கள்:

- அ.ஜாய்ஸ்
- உ.மிராக்கிளின் ஜெஸி
- ஜெ.மதிசங்கர்
- ஜூலி கேத்ரின்
- ரோஸி ஈஸ்டன்
- சாந்தி டி
- பி.விஜிலா
- பானுப்ரியா எஸ்
- பி.ஏஞ்சலின் பிரசன்னா
- டி.சலோமி சகுந்தலா ராணி

*Congratulations*

மரித்துப் போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் மாபெரும் கருவி தேவனுடைய வார்த்தை. - டி.எல் மூடி

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**31 டிசம்பர் 2024 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்புச் சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 December 2024

### 1 Month Bible Reading Challenge

1. Akash Dalvi
2. Anitha Pauline
3. Berin James
4. Christina Samuel
5. Esther Saravanan
6. Esther Stephen
7. FELCIA. I
8. Grace Hepsiba Paul
9. Hebsi Willingston
10. Indhra Gandhi S J
11. J. Amudha Yesurajan
12. Jance. J
13. Jeba
14. Jenifer Yabesh
15. JIJONIXON J
16. M.HENA JANCY MARY
17. Malini Gunasekaran
18. Manjula
19. Mary Anitha K
20. N. Pon Kamala glory
21. P. Arockia Mary Bennet
22. P. Crosswin Devasagayam
23. P. Jamunarani
24. P. Joice
25. P. Manjula
26. P. Pavithra
27. P. Santhiya
28. P.KALAVATHYELUMALAI
29. Jothi. S
30. M. John of arc Flora
31. Priya Vasanth. A.
32. R Padmavathi
33. R Rani
34. R. Durga Ori
35. R. Jeyanthi
36. Rosemary Thankanadar
37. S Anthony Stephen
38. Saidur Rahman Simon
39. Samuel Rajareegam
40. Shirley Sagayam
41. SHUNMGIAH. M
42. T. Christina Selvarani
43. T. HELAN JIJI
44. T. Prema
45. Vanitha

Congratulations!

GODependence +965 6596 2559

Prize & Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 December 2024

### 2 Months Bible Reading Challenge

1. AMAR BAJIRAO KAMBLE
2. Angel Stanly
3. B. Jancy Paulson
4. E. Deva Anbu
5. Hepzibah Robert
6. J. Beula Padmavathy
7. J.Hepziba James
8. Kishan Jaiswal
9. M XAVIER BALACHANDRAN
10. Sandhanamary
11. Sangeetha k
12. Shantsheela Daniel Rangari
13. Shoba Daniel
14. Sushma Suhas Gaikwad
15. Usha Anil Bhore
16. X. THERESE DEVI
17. T. SALOMI DAKUNTHSLA RANI

Congratulations!

GODependence +965 6596 2559

Prize & Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 December 2024

### 3 Months Bible Reading Challenge

1. D. PRIMROSE JEBAMARY
2. AMAR BAJIRAO KAMBLE
3. Arockia Mary Anita. E
4. Beaulah Enoch
5. Helen Mercy.D
6. Jansi Priscilla M
7. JEBA ANGEL RANI K
8. Jebaraj Fletcher A.S
9. Kingsly Thomas
10. Ma. Corazon D Ollado
11. Marine Phelsia
12. P. Subashini
13. Prabha
14. Rev Dr ARUN CHRISTOPHER
15. தா. லில்லி புளோரிடா

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 December 2024

### 4 Months Bible Reading Challenge

1. A R Elizabeth
2. A. SELLAMUTHU
3. ANNAMMA SKARIAH
4. Cherinpreetha Rubert
5. D Esther Annal
6. David Shankar
7. Evangelin
8. Herchil Harish
9. Jancy Jayaraj
10. Josephine Jeya Amos
11. Jothimani Pancharaj
12. Nagaraja
13. P. Pamilla Jean
14. P. Jothimani
15. Paul Chandra Raja G J
16. Pauline M
17. Peyarlin Swamidass.s
18. R C VIMAL CHANDER
19. RANJITHAM DEVAKUMARI
20. Ruby Anbu Grace
21. S. Christy Roselin kani
22. S. Jasmine Rani
23. T. HELAN JIJI
24. சலோமி புஷ்பராஜ்

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 December 2024

### 6 Months Bible Reading Challenge

1. A. Kasthuri
2. Albert. G
3. Anitha Pauline
4. Catherina Devotta
5. Cecil Joseph Turner
6. D. Kalamary
7. Edwin Joseph
8. G. Edward William
9. G. Priscilla Sheela Theanmozhi
10. G. Sowrimuthu Rajarathinam
11. Gracy k
12. Hadlow Oliver
13. Indra Manuel
14. J Sheeba Roselin Dinakaran
15. Jeyanthi
16. J. Jothi Jebarani
17. J. Sheela Selvarani
18. J. Thanga Bhavani
19. Jansi Rani G
20. Jasmine Jesudoss
21. Jonathan Samuel
22. Joybell Frank
23. Kumutha Chellian
24. M Johnofarc Flora
25. M. PANNEERSELVAM
26. Mrs. Angeline Johnson
27. MRS. SALOMI EDWIN
28. R. VIJAYARANI
29. R. Vimala Devi
30. Rahel Priya Amirtharaj
31. Rama
32. Rev D Andrew Christopher Barnabas
33. ROSALIND K
34. Sangeetha k
35. Shoba Daniel
36. Shyamala. S
37. Siddharth
38. Stella Paul
39. Suba Growther
40. Teena
41. ரா. ஜெயந்தி

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

## GODependence Bible Reading Challenges

Congratulations to the Successful Participants as on 31 December 2024

### 1 Year Bible Reading Challenge

1. Vasanthi Devadason
2. A Ruth Jebarathinam
3. A. AMUTHA SUNDAR SINGH
4. A. JOYCE
5. A. Selva Malar.
6. A. Sukumar Arulnesan
7. AJOYCE
8. Amirtharaj Thangaraj
9. Anandaraj
10. Anil Kumar
11. Arulselvi Murugesan
12. C MANIVANNAN
13. C. Prithika
14. D. MALA CHRISTY ROSELIN
15. DANIEL D
16. Dr. Devi Damodharan DGO.
17. Dr. Elizabeth David
18. Elizabeth Daniel
19. Esther Rajasekaran.
20. Francis Xavier
21. Garret Selwyn Samuel. S
22. Gideon S
23. HEPCIBA MARY S
24. J. Jebarani
25. J. sweety selvarani
26. Jadon Amirtharaj
27. Jessy Florence
28. Jeya Roselin
29. JEZREEL LIVINGSTONE N
30. Jimmy S. Sonavane
31. K. B. Rajkumar
32. M. Poopackiam
33. M. Soni
34. Manimozhi. Y
35. Manjula GS
36. Mary Agnes Navaratnam
37. Mary Nthuku
38. Mary Vijayakumar
39. Mathi Shankar J.
40. Mercy Abel Bensam
41. MIYURIAL SANTHI N
42. Mrs. Smieslin Selvam
43. Mrs. Grace Reeta Hemalatha
44. Nirmala Rajkumar
45. Nisha Binoy
46. P. PRADHISTWIN JEBAN SINGH
47. P. Vincent
48. P. Monisha @ Lilly
49. Pavithra Suresh
50. PravinKumar A
51. Purnima Singh
52. தேன் நிதி
53. Ramasamy k
54. Richard Nthuku
55. S RABI SUNDAR
56. SANTHA RUBY S
57. Shekina B
58. Shiji Robert
59. Smieslin Selvam
60. Sneha Jeyher
61. Subashini John
62. SUJATHA. J
63. SUMAN LATHA . Y
64. T. SANTHAKUMARI
65. T.JACOB LASARU JEYAKUMAR
66. Tejaswi Lakshavakam
67. Usha. P
68. V. Jagan
69. Vijayakumar Vethasi[illegible]ony
70. Viji Rajasekar
71. W MERCY HELEN
72. சீனிவாசன் (எ) பீட்டர்
73. ஜா. ஜேஸ்மின் பியூலா மார்க்ரெட்
74. செல்வம்.வ
75. Wordson Newbegin Jayakumar
76. கிறிஸ்டோபர். S. CHRISTOPHER
77. அருள் ராணி ஜே

Congratulations!

GODependence +965 6596 2559

Certificate will be send to them in due time

விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம். - எபிரெயர் 11:3

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

31 ஜனவரி 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்புச் சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்













## சரியான பதில்கள்

➡ இடமிருந்து வலம்
2. யோவான் (1:17)
3. கப்பர்நகூம் (10:15)
4. ஓபேத் (3:32)
5. பெத்லகேம் (2:5)
7. புது (5:37)
8. யோனா (11:30)
11. காபிரியேல் (1:19)
12. ஆபிரகாம் (16:22)
14. ஏசாயா (4:17)
15. நாசரேத்து (4:16)
18. சகேயு (19:8,9)
23. ஏலி (3:23)

⬆ கீழிருந்து மேல்
6. மூன்று (1:56)
9. சிமியோன் (2:27)
13. பிசாசு (7:33)
26. எலிசபெத்து (1:5)

⬅ வலமிருந்து இடம்
17. பதினெட்டு (13:4)
19. ராஜ்யம் (12:32)
20. அகுஸ்துராயன் (2:1)
22. ஆதாம் (3:38)
25. சகரியா (11:50)

⬇ மேலிருந்து கீழ்
1. தெயோப்பிலு (1:1)
10. பத்து (17:12)
16. கூசா (8:3)
17. பஸ்கா (22:1)
21. லோத்து (17:29)
24. ஏரோது (13:31-33)

**வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 3**

**வேதப்பகுதி: லூக்கா**

## சரியான பதில்களை அனுப்பிய முதல் பத்து நபர்கள்:

- கே. லதா லிவிங்ஸ்டன்
- திருமதி. சலோமி எட்வின்
- உ.சுகந்தி குமார்
- ஏ ஆர் எலிசபெத்
- எஸ்.மோகன்ராஜ்
- அ. ஜெய்ஸ்
- எஸ்தர் ஸ்டீபன்
- ஏ.மேனகா ஜோசப்
- இ.உதயகுமார்
- விஜயா ராணி சாமுவேல்

Congratulations


### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்
அற்புதராஜ் சாமுவேல்
ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
ஏ. ஆர். பீட்டர்
டெ. டென்சிங்
டார்வின் நேசகுமார் அ
ஷோபா தானியேல்
ஜோசஃபீன் ஷைனி பால்
கேதரின் சுஜி


தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. - ரோமர் 15:4

# பைபிள் புத்தகங்கள் வாசிக்க ஆகும் நேரம்:

**பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் வாசிக்க ஆகும் நேரம்:**

| | |
|---|---|
| 1. ஆதியாகமம் – 3.5 hours | 21. பிரசங்கி – 30 minutes |
| 2. யாத்திராகமம் – 3 hours | 22. உன்னதப்பாட்டு – 20 minutes |
| 3. லேவியராகமம் – 2 hours | 23. ஏசாயா – 3.75 hours |
| 4. எண்ணாகமம் – 3 hours | 24. எரேமியா – 4 hours |
| 5. உபாகமம் – 2.5 hours | 25. புலம்பல் – 20 minutes |
| 6. யோசுவா – 1.75 hours | 26. எசேக்கியேல் – 3.75 hours |
| 7. நியாயாதிபதிகள் – 1.75 hours | 27. தானியேல் – 1.25 hours |
| 8. ரூத் – 15 minutes | 28. ஓசியா – 30 minutes |
| 9. 1 சாமுவேல்– 2.25 hours | 29. யோவேல் – 12 minutes |
| 10. 2 சாமுவேல்– 1.75 hours | 30. ஆமோஸ் – 25 minutes |
| 11. 1 இராஜாக்கள் – 2 hours | 31. ஒபதியா – 4 minutes |
| 12. 2 இராஜாக்கள் – 2.25 hours | 32. யோனா – 8 minutes |
| 13. 1 நாளாகமம் – 2 hours | 33. மீகா – 20 minutes |
| 14. 2 நாளாகமம் – 2.5 hours | 34. நாகூம் – 8 minutes |
| 15. எஸ்றா – 40 minutes | 35. ஆபகூக் – 9 minutes |
| 16. நெகேமியா – 1 hour | 36. செப்பனியா – 10 minutes |
| 17. எஸ்தர் – 30 minutes | 37. ஆகாய் – 7 minutes |
| 18. யோபு – 1.75 hours | 38. சகரியா – 40 minutes |
| 19. சங்கீதம் – 5 hours | 39. மல்கியா – 11 minutes |
| 20. நீதிமொழிகள் – 1.75 hours | |

எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஏதேனும் ஒன்றில் உங்கள் வசதிக்கேற்றபடி சேர உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

**புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் வாசிக்க ஆகும் நேரம்::**

| | |
|---|---|
| 1. மத்தேயு – 2.5 hours | 15. 1 தீமோத்தேயு – 16 minutes |
| 2. மாற்கு – 1.5 hours | 16. 2 தீமோத்தேயு – 11 minutes |
| 3. லூக்கா – 2.5 hours | 17. தீத்து – 7 minutes |
| 4. யோவான் – 2 hours | 18. பிலேமோன் – 3 minutes |
| 5. அப்போஸ்தலர் – 2.25 hours | 19. எபிரெயர் – 45 minutes |
| 6. ரோமர் – 1 hour | 20. யாக்கோபு – 16 minutes |
| 7. 1 கொரிந்தியர் – 1 hour | 21. 1 பேதுரு – 16 minutes |
| 8. 2 கொரிந்தியர் – 40 minutes | 22. 2 பேதுரு – 10 minutes |
| 9. கலாத்தியர் – 20 minutes | 23. 1 யோவான் – 16 minutes |
| 10. எபேசியர் – 20 minutes | 24. 2 யோவான் – 2 minutes |
| 11. பிலிப்பியர் – 14 minutes | 25. 3 யோவான் – 2 minutes |
| 12. கொலோசெயர் – 13 minutes | 26. யூதா – 4 minutes |
| 13. 1 தெசலோனிக்கேயர்– 12 minutes | 27. வெளிப்படுத்தின விசேஷம் – 1.25 hours |
| 14. 2 தெசலோனிக்கேயர் – 7 minutes | |

தேவனுடைய வார்த்தையானது, நம் சிந்தனைக்கு மட்டுமல்ல, நம் ஆத்துமாவிற்கான உணவு ஆகும்.

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை இஸ்ரவேலர்கள் உணர்ந்துகொள்ளும்படி தேவன் அவர்களை வனாந்திரத்தில் வழிநடத்தினார் என்று மோசே ஜனங்களுக்கு போதித்தார் (உபா.8:3, மத்தேயு 4:4). பரிசுத்த வேதாகமத்தை நாம் நம் வாழ்க்கைப் பயண நண்பனாக அல்லது வழித்துணையாக வைத்திருக்கிறோமா?

தொடர்ந்து வாசிப்போம்.....

**-சகோ. அற்புதராஜ் சாமுவேல்.**

**நாம் கடைபிடிக்க வேண்டிய நான்கு விதிகள்: முதலாவது, தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள்; இரண்டாவதாக, தேவனுடைய வார்த்தை உங்களை ஆட்கொள்ளும்வரையிலும் அதை நீங்கள் உட்கொள்ளுங்கள். மூன்றாவதாக, தேவனுடைய வார்த்தையை விசுவாசியுங்கள். நான்காவதாக, வார்த்தையின்படி வாழுங்கள். - ஸ்மித் விகிள்ஸ்வொர்த்**

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான

## வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

**இன்னும் தாமதம் ஏன்?**
**இன்றே சேருங்கள்.**

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

வேதாகமம் முழு உலகிலும் மிகவும் மகிழ்ச்சிகரமான புத்தகம் ஆகும்; அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.
- சார்லஸ் ஸ்பர்ஜன்

# எபெத்மெலேக்

## எருசலேமில் வசித்தவர்கள் பலரைக் காப்பாற்றியதில் முக்கிய பங்கு வகித்தவர்.

**(எரேமியா 38:1-13; 39:15-18)**

நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டபோது, எரேமியா தீர்க்கதரிசி சிதேக்கியா ராஜாவிடம், “இந்த நகரத்தில் தங்கியிருப்பவன் பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், கொள்ளைநோயினாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப்போகிறவனோ உயிரோடிருப்பான்." என்று கூறினான். இது ராஜாவின் அதிகாரிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. அவர்கள் எரேமியாவை ஒரு கிணற்றில் போட்டு, சாகும்படி விட்டுவிட்டார்கள்.

எத்தியோப்பியனும் அரச அரண்மனை அதிகாரியுமான எபெத்மெலேக், அதைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, பென்யமீன் வாயிலில் பகிரங்கமாக சிதேக்கியா ராஜாவை அணுகினார். எரேமியாவின் உயிரைக் காப்பாற்றும்படி அவர் ராஜாவிடம் வேண்டினார். ராஜா கட்டளையிட்டபடி, எபெத்மெலேக்கும் மற்றவர்களும் எரேமியாவை கிணற்றிலிருந்து வெளியே இழுத்தனர். ராஜாவின் எல்லா அதிகாரிகளும் எரேமியாவைக் கொல்ல விரும்பியதால், எபெத்மெலேக் தீர்க்கதரிசியைக் காப்பாற்ற தன் உயிரைப் பணயம் வைக்க வேண்டியிருந்தது.

கிமு 586 இல் எருசலேம் கல்தேயரால் கைப்பற்றப்பட்டது. எரேமியா பாபிலோனியர்களிடம் சண்டையிடுவதற்குப் பதிலாக அவர்களிடம் சரணடையுமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார். எரேமியாவின் ஆன்மீகத் தலைமை மக்கள் பேரழிவிலிருந்து தப்பிக்க உதவியது.

எரேமியா தனது தீர்க்கதரிசனத்தை தொடர முடிந்ததால் எருசலேம் சிறையிருப்பில் தப்பிப்பிழைக்க முடிந்தது

கர்த்தர் எபெத்மெலேக்கிடம், "உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை; நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப்பொருளைப்போல இருக்கும்" என்று சொன்னார். (39:18).

**எபெத்மெலேக்கின் செயல்கள் நம்மிடம் நிறைய பேசுகின்றன:**

- சத்தியத்தின் பக்கம் இருப்பவர்களுடன் நாம் நிற்க வேண்டும்.
- ஒரு தேவையைக் கண்டால், நாம் உதவ முன்வர வேண்டும், செயலற்றவர்களாக இருக்கக்கூடாது.
- மற்றவர்களுக்கு உதவுவது எப்போதுமே ஆபத்தை உள்ளடக்கியது. ஆனால் அதைச் செய்வது மதிப்புக்குரியது.
- அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய நாம் தயாராக இருந்தால் தேவன் நமக்கு தைரியத்தைக் கொடுப்பார்.

நம்மையும் மற்றவர்களையும் காப்பாற்ற கர்த்தர் நம் விசுவாசச் செயல்களைப் பயன்படுத்துவார்.

**- சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 4

### வேதப்பகுதி: யோவான்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| | 2 | | | ■ | | 3 | |
| | 4 | 8 | | | | 5 | 6 |
| | | ■ | | | 7 | | |
| | | 8 | 9 | 10 | 11 | | |
| 12 | | 13 | | | | | |
| 14 | | | | ■ | | | |
| ■ | 15 | | | | 16 | 17 | 18 |

**➡ இடமிருந்து வலம்**

1. கலிலேயாக்கடலின் இன்னொரு பெயர் (8)
2. மரியாள் இயேசுவை என்னவென்று அழைத்தாள்? (3)
13. யூதாஸ் வைத்துக் கொண்டிருந்தது (4)
14. இயேசுவின் __ மெய்யான பானமாயிருக்கிறது (5)
15. திராட்சத் தோட்டக்காரர் யார் (2)

**⬅ வலமிருந்து இடம்**

3. நியாயப்பிரமாணம் யார்மூலமாய் கொடுக்கப்பட்டது (2)
5. இயேசுவுக்கு பணிவிடைசெய்தவள் (5)
7. நாத்தான்வேலின் ஊர் (2)
16. ஆட்டுவாசலருகே இருந்த குளம் (4)

**⬇ மேலிருந்து கீழ்**

1. தோமாவின் மறுபெயர் (3)
4. சீமான்பேதுரு யாருடைய காதை வெட்டினான் (4)
6. ஆதியிலே இருந்தது (4)
8. பிலாத்துவின் நியாயாசனம் இருந்த இடம் (4)

**⬆ கீழிருந்து மேல்**

6. (இயேசு) நானே ஆடுகளுக்கு __ (3)
9. லாசருவின் ஊர் (5)
10. சீமோனின் தகப்பன் பெயர் (2)
11. யாக்கோபுடைய கிணறு இருந்த ஊர் (3)
12. எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தவன் (3)
17. இயேசு எதை வைத்துப் போனார் (5)
18. பொல்லாங்கு செய்கிறவன் பகைப்பது (2)

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

CLICK HERE https://forms.gle/sMkD6pjoZq3GR1Wu8

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/02/2025 க்கு முன்பதாக அனுப்பவும்.சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**நம் மூளையறிவில் சேமித்துவைத்திருக்கும் வசனம் அல்ல, இருதயத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் வசனமே நம்மைப் பாவத்தில் இருந்து விலக்கிப் பாதுகாக்கிறது. - வன்ஸ் ஹேவ்னர்**

# யோவான்

**நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம் :** கி.மு. 7 - கி.பி.26

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 80 - கி.பி 90

**ஆசிரியர் :** யோவான்

**புத்தகத்தின் வகை:** நற்செய்தி நூல்

## முன்னுரை

நான்காம் நற்செய்தியின் ஆசிரியர் செபதேயுவின் மகனாகிய யோவான் என்பது மிகத் தொன்மையான கிறிஸ்தவ மரபு. இதனை எழுதியதாக நற்செய்தியே கூறும் அன்புச் சீடர் (21:24) இவராகத்தான இருக்க வேண்டும். யோவான் இயேசுவைப்பற்றி எடுத்துரைத்த செய்திகள் அவரது சமூகத்தில் தனி வடிவம் பெற்று , பின்னர் எழுத்து வடிவம் ஏற்றது. காலப்போக்கில் கிறிஸ்தவச் சமூகத்தின் தேவைகளுக் ஏற்பச் சில மாற்றங்கள் பெற்று, முன்னுரை, பிற்சேர்க்கை ஆகியவற்றுடன் இணைக்கப் பெற்று இன்றைய வடிவம் பெற்றது. இயேசுவின் அன்புச் சீடரான யோவான் முதலில் யோவான் ஸ்நானகனின் சீடராக இருந்து பின் இயேசுவின் சீடராகிறார் (1: 35-39). இயேசுவோடு மிகுந்த நெருக்கம் கொணடிருந்த மூன்று அப்போஸ்தலருள் இவரும் ஒருவர் (மாற் 5:37; 9:2;13:3, 14:33). இறுதி இராப்போஜனத்தின் போது இயேசுவின மார்புப் பக்கமாய் சாய்ந்திருந்த இவர் (13:22-26) மற்றத் அப்போஸ்தலரெல்லாம் ஓடிவிட்ட நேரத்திலும் இயேசுவின் சிலுவையடியில் நின்றார். இவரிடமே இயேசு தம் அன்பு அம்மாவை ஒப்படைத்தார்(19:25-27).

## சூழலும் நோக்கமும்

"இயேசுவே தேவகுமாரனாகிய மேசியா என்று நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் நாமத்தினால் ஜீவன் பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப் பெற்றுள்ளன" (20:31) என்பதே இந்நூலின் நோக்கமாகும். கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்திக் கிறிஸ்தவ வாழ்வை வலுப்படுத்துவது நற்செய்தியின் முக்கிய நோக்கமாய் இருந்தது. மேலும் கிறிஸ்துவுக்கு முந்திய பழையன கழிந்து, கிறிஸ்து வழியாகப் புதியன புகுந்துவிட்டன என்று காட்டுவதும்,கிறிஸ்துவை நேரடியாகக் கண்டிராத இரண்டாம் தலைமுறையினருக்கு அவரைப் பற்றிய நம்பத்தக்க சான்று அளிப்பதும் (20:29) முதல் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் தோன்றிய சில தவறான கொள்கைகளை (யோவான் ஸநானகனே மேசியா, தோற்றக் கொள்கை போன்றவை) திருத்துவதும் யோவானின் நோக்கங்களாய் இருந்தன. இந்நோக்கங்களை நிறைவேற்றும் வண்ணம் ஏறத்தாழ கி.பி .90ஆம் ஆண்டில் கிரேக்க மொழியில் இந்நற்செய்தி எழுதப்பட்டது. இது எபேசு நகரில் எழுதப்பட்டது.

## முக்கிய வசனங்கள்

யோவான் 1:1, 14, 1:29, 3:16, 6:29, 10:10, 10:28, 11:25-26, 13:35, 14:6, 14:9, 17:17, 19:30, 20:29

## உள்ளடக்கம்

யோவானின் நற்செய்தி ஏழு அற்புதங்களை மட்டுமே உள்ளடக்கியது - யோவான் அவற்றை "அடையாளங்கள்" என்று அழைக்கிறார் - கிறிஸ்துவின் தெய்வீகத்தை நிரூபிக்கவும் அவருடைய ஊழியத்தை விளக்கவும் லாசருவை உயிரோடு எழுப்பியது போன்ற சில அற்புதங்கள் யோவானில் மட்டுமே காணப்படுகின்றன . நான்கு சுவிசேஷங்களில் யோவானுடையது மிகவும் அருமையான இறையியல் ஆகும். யோவானின் சுவிசேஷம் இயேசுவின் பரமேறுதலுக்குப் பிறகு பரிசுத்த ஆவியின் நெருங்கி வரும் ஊழியத்தைப் பற்றி அதிகம் பகிர்ந்து கொள்கிறது. யோவானின் நற்செய்தியில் சில வார்த்தைகள் அல்லது சொற்றொடர்கள் மீண்டும் மீண்டும் வரும் கருப்பொருளை உருவாக்குகின்றன: நம்பிக்கை, சாட்சி, ஆறுதல், வாழ்க்கை - மரணம், ஒளி - இருள், நான் மற்றும் அன்பு. யோவானின் நற்செய்தி இயேசு கிறிஸ்துவை அவரது பிறப்பிலிருந்து அல்ல, ஆனால் படைப்பிற்கு முன் "ஆரம்பத்தில்" இருந்து அறிமுகப்படுத்துகிறது. யோவான் இயேசுவை "வார்த்தை" (லோகோஸ்) என்று அழைக்கிறார், அவர் தேவனாகவே, படைப்பின் ஒவ்வொரு அம்சத்திலும் ஈடுபட்டார் (யோவான் 1:1-3) மற்றும் பின்னர் அவர் மாம்சமாக மாறினார் (வசனம் 14). அவர் தேவனின் களங்கமற்ற ஆட்டுக்குட்டி (வசனம் 29). யோவானின் நற்செய்தியில் பல ஆவிக்குரிய உரையாடல்கள் உள்ளன, அதாவது இயேசு சமாரியப் பெண்ணுடன் பேசுவது, அவரை மேசியாவாகக் காட்டுவது (யோவான் 4:26) மற்றும் சிலுவை மரணத்தின் மூலம் இரட்சிப்பை விளக்கும் நிக்கொதேமுடன் இயேசுவின் சந்திப்பது (யோவான் 3: 14-16) போன்றவை. ஓய்வுநாளில் குணமாக்குதல், மற்றும் தேவனுக்கு மட்டுமே சொந்தமான பண்புகளைக் கூறுதல் (யோவான் 5:18; 8:56-59; 9:6, 16; 10:33) போன்றவை வழியாக இயேசு மீண்டும் மீண்டும் யூதத் தலைவர்களைத் திருத்துவதன் மூலம் அவர்களைக் கோபப்படுத்துகிறார் (யோவான் 2:13-16). யோவான் நற்செய்தியின் கடைசி ஒன்பது அதிகாரங்கள் இயேசுவின் வாழ்க்கையின் இறுதி வாரத்தைக் குறிப்பிடுகின்றன. இயேசு தம்முடைய சீஷர்களை தம்முடைய வரவிருக்கும் மரணத்திற்காகவும், அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பிறகு அவர்களுடைய ஊழியத்திற்காகவும் தயார்படுத்துகிறார் (யோவான் 14-17). பின்னர் அவர் நம் இடத்தில் சிலுவையில் மனமுவந்து மரிக்கிறார் (யோவான் 10:15-18), நம்முடைய பாவக் கடனை முழுவதுமாக செலுத்துகிறார் (யோவான் 19:30) அதனால் அவரை நம்புகிறவர் இரட்சிக்கப்படுவார் (யோவான் 3:14-16). இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், அவர்தேவன் மற்றும் எஜமானர் (யோவான் 20:24-29) ஆவார். மனிதரான வார்த்தையே இயேசு எனத் தொடக்கத்திலேயே எடுத்துரைக்கிறார் யோவான். அவரது இயல்பை ஒளி, ஜீவன, வழி, சத்தியம், உணவு போன்ற உருவகங்களால் விளக்கி, இயேசு யார் என்பதை எல்லாக் கால, இட, சமய, பண்பாட்டு மக்களுக்கும் புரியவைக்கிறார்.

## தொடர்புகள்

இயேசுவை பழைய ஏற்பாட்டின் தேவனாக யோவான் சித்தரித்ததன் நற்செய்தி, இயேசுவின் ஏழு "நான்" அறிக்கைகளில் மிக அழுத்தமாக காணப்படுகிறது. அவர் "ஜீவ அப்பம்" (யோவான் 6:35), வனாந்தரத்தில் உள்ள இஸ்ரவேலர்களுக்கு உணவளிக்க பரலோகத்திலிருந்து மன்னாவை வழங்கியது போல, அவருடைய மக்களின் ஆத்துமாக்களுக்கு உணவளிக்க தேவனால் வழங்கப்பட்டது (யாத் 16:11-36). இயேசு "உலகின் ஒளி" (யோவான் 8:12), பழைய ஏற்பாட்டில் தேவன் தம் மக்களுக்கு வாக்குறுதியளித்த அதே ஒளி (ஏசாயா 30:26; 60:19-22) மற்றும் புதிய ஏற்பாட்டில் அதன் உச்சக்கட்டத்தைக் காணும் எருசலேம் ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து அதன் ஒளியாக காணப்படுதல் (வெளி 21:23). "நான்" என்ற இரண்டு கூற்றுகள் இயேசுவை "நல்ல மேய்ப்பன்" என்றும் "ஆடுகளின் வாசல்" என்றும் குறிப்பிடுகின்றன. இயேசுவை பழைய ஏற்பாட்டின் தேவன், இஸ்ரவேலின் மேய்ப்பன் (சங் 23:1; 80:1; எரே 31:10; எசேக் 34:23) மற்றும் ஆட்டுத்தொழுவத்துக்குள் ஒரே வாசல், ஒரே கதவு என்று தெளிவான குறிப்புகள் இங்கே உள்ளன. இயேசுவே இரட்சிப்பின் வழி. யூதர்கள் உயிர்த்தெழுதலை நம்பினர். உண்மையில், இயேசுவுக்கு எதிராக அவர்கள் பயன்படுத்தக்கூடிய அறிக்கைகளை வெளியிடுவதற்கு அவரை ஏமாற்றுவதற்கு இக்கோட்பாட்டைப் பயன்படுத்தினர். ஆனால், லாசருவின் கல்லறையில், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 11:25) என்று அவர் கூறியது அவர்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கும்.அவரே உயிர்த்தெழுதலுக்குக் காரணம் என்றும், ஜீவன் மற்றும் மரணத்தின் அதிகாரத்தை வைத்திருப்பதாகவும் கூறிக்கொண்டிருந்தார். தேவனைத்தவிர வேறு யாரும் அப்படிப்பட்டதைக் கோர முடியாது. இதேபோல், இயேசுவின் கூற்று "வழி, சத்தியம், ஜீவன்" (யோவான் 14:6) அவரை பழைய ஏற்பாட்டுடன் தவறாமல் இணைத்தது. ஏசாயா 35:8ல் தீர்க்கதரிசனம் கூறப்பட்ட "பரிசுத்தத்தின் வழி" அவருடையது; அவர் எருசலேமில் இருந்தபோது சகரியா 8:3 இன் சத்திய நகரத்தை நிறுவினார்; நற்செய்தியின் உண்மைகளைப் பிரசங்கித்தார். "ஜீவன்" என்று இயேசு தனது தெய்வத்துவத்தை உயிரைப் படைத்தவராக உறுதிப்படுத்துகிறார் (யோவான் 1:1-3; ஆதி 2:7). இறுதியாக, "உண்மையான திராட்சைக் கொடி" (யோவான் 15: 1, 5) என, பல பழைய ஏற்பாட்டு பத்திகளில் கர்த்தருடைய திராட்சைத் தோட்டம் என்று அழைக்கப்படும் இஸ்ரவேல் தேசத்துடன் இயேசு தம்மை அடையாளப்படுத்துகிறார். இஸ்ரவேலின் திராட்சைத் தோட்டத்தின் உண்மையான திராட்சைக் கொடியாக, அவர் தன்னை "உண்மையான இஸ்ரவேலின்" ஆண்டவராக சித்தரிக்கிறார் - விசுவாசத்துடன் தன்னிடம் வருபவர்கள் (ரோமர் 9:6) தன்னில் கொடியாக இருப்பதாக கூறுகிறார்.

## நடைமுறை பயன்பாடு

யோவானின் சுவிசேஷம் தொலைந்து போனவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதற்கான அதன் நோக்கத்தை தொடர்ந்து நிறைவேற்றுகிறது (யோவான் 3:16). இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்கும் கிணற்றில் அருகில் சந்தித்த பெண்ணுக்கும் இடையே பதிவுசெய்யப்பட்ட உரையாடல்களில் (அதிகாரங்கள் 3-4) இருந்து, இயேசுவின் தனிப்பட்ட சுவிசேஷத்தின் மாதிரியை நாம் அதிகம் கற்றுக்கொள்கிறோம். அவர் இறப்பதற்கு முன் தம் சீடர்களுக்கு அவர் ஆற்றிய ஆறுதல் வார்த்தைகள் (யோவான் 14:1-6, 16; 16:33) துக்கமான காலங்களில் இன்னும் மிகுந்த ஆறுதலைத் தருகின்றன. அதிகாரம் 17ல் விசுவாசிகளுக்கான இயேசுவின் "உயர்ந்த ஆசாரிய ஜெபம்" விசுவாசிகளுக்கு ஒரு அற்புதமான ஊக்கமூட்டும் ஆதாரமாக உள்ளது. முழு தேவன் மற்றும் முழு மனிதன் ஆக இருந்த கிறிஸ்துவின் தெய்வத்துவம் பற்றிய யோவானின் போதனைகள் (யோவான் 1:1-3, 14; 5:22-23; 8:58; 14:8-9; 20:28) இயேசு யார் என்பதை தெளிவாக வெளிப்படுத்த உதவுகின்றன.

## அமைப்பு

யூதத் திருவிழாக்களை அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் உரைகளும் அவரைப் பற்றிய பிற செய்திகளும் தொகுக்கப்பட்டிருக்கிறது.

1) முன்னுரைப் பாடல் 1:1 - 18
2) முதல் பஸ்கா விழா 1:19 - 4:54
3) யூதர்களின் திருவிழா 5:1 - 47
4) இரண்டாம் பஸ்கா விழா 6:1 - 71
5) கூடார விழா 7:1 - 10:21
6) கோவில் அர்ப்பண விழா 10:22 - 11:54
7) இறுதிப் பஸ்கா விழா 11:55 - 20:31

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

தேவன் தம் ஜனங்கள் மீது காண்பித்த அவருடைய தயவு பற்றிய அநேக உதாரணங்களைப் பற்றி பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. தேவ தயவு அவர்கள் பல வெற்றிகளைப் பெற்றனுபவிக்க காரணமாக இருந்தது. தேவதயவு என்பது அவர் மனிதர்கள் மீது காட்டும் கருணைப் பேரன்பு ஆகும். - ஜான் எக்ஹார்ட்

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

**கர்த்தருக்கு ஸ்தோதிரம்...**
என் பெயர் மேரி. என் ஊர் திருநெல்வேலி. நான் இயேசுவை அறியாத இந்து குடும்பத்தை சார்ந்தவள். எங்க அப்பா ஒரு சாமி ஆடி. எங்க அம்மா இறந்துட்டாங்க. நாங்கள் மொத்தம் 5 பேர். என் ஒரு அக்கா Nursing Training படிக்க போய்ட்டாங்க. தங்கச்சி Hostel-ல சேர்த்து படிக்க வைத்தார்கள். நான் மற்றும் தம்பி மட்டும் வீட்டிலேயே படித்து கொண்டு இருந்தோம். அப்பா யாருக்கும் சொல்லாமல் எங்க சித்தியை கல்யாணம் முடித்து வந்தார். அப்பாவும் சித்தியும் சேர்ந்து ரொம்ப கொடுமையாய் நடத்தினார்கள். அப்பொழுது எனக்கு என்ன செய்யவேண்டும் என்று தெரியாமல் தற்கொலை செய்ய நினைத்தேன். ரொம்ப வேதனையில் இருக்கும்போது என்னுடைய கிளாஸ் டீச்சர் அவர்களிடம் போய் பகிர்ந்தேன். நான் 10ம் வகுப்பு படித்திருந்தேன். 12ம் வகுப்பு படிக்க விரும்பினேன், ஆனால் படிக்க வைக்கவில்லை. அதனால் அவர்களிடம் போய் அழுதேன். அவர்கள், “Hostel-லில் உன்னை சேர்த்து விடுகிறேன், நீ தையல் படி. அது உனக்கு பயனுள்ளதாக இருக்கும்” என்று கூறி என்னை சேர்த்து வைத்தார்கள்.

அது ஒரு ஆண்டு படிக்கும் இடம், அது ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனம். அங்கு போய் தான் இயேசு யார் என்று தெரிந்துகொண்டேன். அதன் பிறகு அங்கு பைபிள் படிக்கச் சொன்னார்கள். படிப்பேன் எனினும், ஜெபம் செய்ய எனக்கு தெரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக படித்து மற்ற பிள்ளைகள் செய்யும் ஜெபத்தை பார்த்து நான் வளர்ந்தேன். இப்படித் தொடர்ந்து படித்து ஒரு ஆண்டு முடித்தேன். வீட்டுக்குச் சென்று ஜெபம் பண்ண, முழங்கால் போட்டேன். அப்போது ஜெபம் பண்ணுவதை பார்த்த சித்தி என் அப்பாவிடம் இதை தெரிவித்தார். அப்போது என் அப்பா என்னை அடிக்க வருவார். அதனால் பயந்து நான் என்ன செய்யவேண்டும் என்று புரியாமல் படுத்துக்கொண்டு ஜெபம் செய்வேன். யாருக்கும் தெரியாத நேரங்களில் ஜெபம் செய்வேன். அதன் பிறகு, என் அக்கா என்னை 11 மற்றும் 12ம் வகுப்பை படிக்க வைத்தாள். அதன் பிறகு எனக்கு திருமணம் நடந்தது. எனக்கு திருமணம் முடிந்த பிறகு சபைக்கு செல்ல ஆரம்பித்தேன்.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்:**

நான் போன சபையில், நீங்கள் வேதாகமம் படித்து, Exam எழுதுங்கள் என்று கூறினார்கள். சரி என்று பைபிள் படிக்க ஆரம்பித்தேன். 2 முறை படித்து முடித்தேன். பரிசும் கிடைத்தது. அதன் பிறகு GODependence 6 மாத வேதவாசிப்புச் சவால்கள் குழுவில் கலந்துகொண்டேன். இப்போது நான் 3 முறை பைபிள் படித்திருக்கிறேன். பைபிள் வாசிப்பதன் மூலம் ஆண்டவர் குறித்து அனைத்தையும் அறிந்து கொண்டேன். அற்புதங்கள், அடையாளங்கள், வேதத்திலுள்ள பாத்திரங்கள் பற்றி தெரிந்துகொண்டேன். ஆவிக்குறிய சம்பவங்கள் கெட்டகுமாரன் சம்பவம், சகேயு சம்பவம், யோனா சம்பவம் என கொஞ்சம் கொஞ்மாக தெரிந்துகொண்டேன். அது ஆர்வமாக இருந்தது.

**நீங்கள் தற்போது வாசித்து முடித்திருக்கிற இந்த வேதவாசிப்பு சவாலில் GODEPENDENCE வாட்சாப் குழுவின் நடைமுறைகள் எந்த அளவில் உதவின?**

GODependence 6 மாத குழுவில் ஒவ்வொரு நாளும் மேற்கோள் கொடுப்பார்கள். அதுவும் மட்டுமல்லாமல், வாரத்திற்கு ஒரு தடவை பைபிள் Quiz நடத்துகிறார்கள். அது மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. ஏனெனில் நாங்கள் படித்ததை பரிசீலனை செய்ய முடியும். திரும்பி பார்க்க முடியும். அப்புறம் தினமும் கொடுக்கப்படும் விளக்க உரை மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. கண்ணோட்டம் பகுதி, நூல் அறிமுகம் இன்னும் வேதாகமத்தை ஆழமாக அறிந்துகொள்ள உதவியாக இருந்தது. ஒவ்வொரு நாளுக்கான ஜெப கரிசனை ஜெபிக்க உதவியாக இருந்தது. தற்போது 1 வருட குழுவில் இணைத்துள்ளேன். இன்னும் அதிகமாக, ஆழமாக தேவனுடைய வார்த்தையை தெரிந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

**பரிசுத்த வேதம், வேதவாசிப்பு அதன் அவசியம் குறித்து தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு நீங்கள் ஒரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

எனக்கு அப்பா சித்தியிடம் கிடைக்காத அன்பு, நான் இயேசுவை ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த அன்பு எனக்கு கிடைத்தது. தேவனுடைய வார்த்தைகள் மூலம் இயேசு என்னோடு பேசினார். இதை கேட்கிற அனைவருக்கும் பரிசுத்த வேத வாசிப்பு மிகவும் அவசியம். இதன் மூலம் நாம் அநேக காரியங்களை கற்றுக்கொள்ள முடிகிறது. இதை கேட்டு நீங்கள் யாவரும் வேதம் வாசியுங்கள். கர்த்தரின் ஆசிர்வாதத்தை பெற்று கொள்ளுங்கள். இந்த இணைப்பில் சேர்ந்து கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசிர்வதிப்பார். ஆமென்.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

- **70 வயதே ஆனாலும் வேதாகமம் வாசிக்க வயது ஒரு தடை கிடையாது** CLICK HERE BRO. ROBERTSON
- **வேதாகமம் வாசித்தல்எல்லா விதத்திலும் ஆசீர்வாதமாக இருக்க எனக்கு உதவுகிறது** CLICK HERE SIS . REMI
- **எவ்வளவு வேதாகமத்தை வாசிக்கிறோமோ அவ்வளவு நம்மை உயர்த்துவார்** CLICK HERE SIS. JEYANTHY
- **கையிடும் வேலை ஆசிர்வதிக்கப்பட கையிலே வேதாகமம் எடுத்து வாசித்தேன்** CLICK HERE SIS. JAYAMARY VIJAYA KUMAR
- **தேவன் யாரென அறியாத நான் வேதாகமத்தை வாசித்து முடித்திருக்கிறேன் எப்படி தெரியுமா?** SIS.GOMATHI CLICK HERE

நாம் தேவனுடைய சத்தியங்களை அதிகமாக வாசித்து, அந்த சத்தியமானது நம் சிந்தனைகளை நிரப்ப அனுமதிக்கும்போது, பொய்களையும், விஷ சிந்தனைகளையும் பற்றி யோசிக்க நாம் குறைவான நேரம் செலவழிப்போம் - லைசா டெர்கெர்ஸ்ட்

1

## ரமலான் மற்றும் லெந்துகால வேத வாசிப்பு சவால்கள் - 2025

வழக்கம் போல், இந்த ஆண்டும் “ரமலான் வேத வாசிப்பு சவாலை” (பிப்ரவரி 28 - மார்ச் 30) நடத்துகிறோம். இந்த வருடத்தில் முதன்முறையாக “லெந்துகால வேத வாசிப்பு சவாலையும்” (மார்ச் 5 - ஏப்ரல் 17) அறிமுகப்படுத்துகிறோம்.

இவ்விரண்டு தேதிகளும் ஒரே நேரத்தை ஒட்டியிருப்பதால், நமது வேதவாசிப்பு சவால்களில் கலந்து கொள்பவர்கள் தங்களுடைய வழக்கமான வேத வாசிப்பு சவால்களுடன் கூடுதலாக ஒரே நேரத்தில் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றில் மட்டும் சேரமுடியும்.



2



## GODependence கருத்தரங்கு

ஒவ்வொரு மாதமும் பல்வேறு பயனுள்ள கிறிஸ்தவ தலைப்புகளில் GODependence கருத்தரங்குகளை நடத்த தீர்மானித்திருக்கிறோம். இதில் கலந்து கொள்கிறவர்கள் வெற்றிகரமான கிறிஸ்தவர்களாக மாற உதவும் நடைமுறை அம்சங்கள் மற்றும் ஆவிக்குரிய தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படும்.

மேலும் தகவல்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும் அல்லது ஒவ்வொரு மாதமும் இந்த பகுதியைப் பார்வையிடவும்.

3

## சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் 2024-25

சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்களின் மூன்றாவது பருவம் 2025 மார்ச் மாதத்தின் முதல் வாரத்துடன் முடிவுக்கு வருகிறது. 2024-25 கல்வியாண்டில் சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவியர் மாணவியர் கலந்து கொண்டனர்.

வரும் கல்வியாண்டு 2025-26க்கான அடுத்த சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் ஜூன் 2025இல் ஆரம்பிக்கும். உங்கள் குழந்தைகளை அதில் இணைக்க விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.



4



## வேத தியான குழுக்கள் (BMG) - April 2025 முதல்

வேத தியான குழுக்களை (BMG) தற்போது நாங்கள் மீண்டும் ஏப்ரல் 2025 இல் ஆரம்பித்து தொடர்ந்து நடத்திட திட்டமிடுகிறோம். இவற்றில் கலந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கான பயிற்சிகள் மார்ச் 2025 ல் நடைபெறும்.

இது குறித்த மேலும் அதிக தகவல்கள் அடுத்த இதழில் இடம் பெறும்.

FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence

GODependence

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

மகா பெரிய (வேதப்) புத்தகத்தின் மீதான உண்மையான அன்பு மகா பெரிய தேவனிடம் இருந்து மாபெரும் அமைதியை நமக்குக் கொண்டு வருகிறது, மேலும் அது நமக்கு மிகப்பெரியதொரு பாதுகாப்பாகவும் இருக்கிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்